


# பாலியர் நேசன்.

நானே நல்ல மேய்ப்பன்.

குழந்தைகளை என்னிடத்தில் வரவிடுங்கள், தடைபண்ணுதிருங்கள்.

௩ம் புத்தகம்.] யாழ்ப்பாணம் ௲௮௱௬௰௧ம் ௵ ஆனி ௴. இதன்விலை வருஷம் ஒன்றுக்கு, அரை ரூபாய். [சங்கியை ௬.


## பத்திரத்தின் விலை.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு பிரதிவாங்குவார்க்குவிலை | | | சி. | ௧ |
| ஒரேமுறையில் ௧0 | " | " | " | ௬ |
| ௨0 | " | " | " | ௧௭ |
| ௨௫ | " | " | " | ௨௧ |
| ௫0 | " | " | " | ௪0 |
| ௧00 | " | " | " | ௭௫ |

தபாற்செலவு பிறம்பாய்வரும்.

## SUBSCRIPTIONS.

| | | | |
|---|---|---|---|
| Mr. David (postage) | | | 6 |
| " க. கனகர் | | 1 | 0 |
| " ந. கார்த்திகேசர் | | 1 | 0 |
| " யோசுவா | | 1 | 0 |
| " தாவீது | | 1 | 0 |
| " சாமுவேல் | | 1 | 0 |
| Oodoovil Christian Association | 3 | 1 | 0 |
| Batticotta " " | | 3 | 8¼ |

## ஆனிமாதம்.

இம்மாதப்பெயர் யூனோ (Juno) என்னுந்தேவிநாமப்படி வழங்கிவருகிறது. யாழ்ப்பாணத்திலுள்ளோர் மாரிகாலத்திற்கு வசதியாயிருக்கும்படி தங்கள் வீடுகளை வேய்வதற்குப் பனை ஓலைகளை வெட்டுவிப்பார்கள். இம்மாதத்தில் கடுஞ் சோழகம் சற்று தூக்கமாகும். அதை ஆனித்தூக்கமென்பார்கள். இடைக்கிடை மப்புந்தூறலுமுண்டாகும். இவ்வேளையில் பலா, மா முதலிய மரங்களின் கனிவர்க்கங்கள் மிகுதி. சிறுதானிய விளைவு மிகுதி. தினை, சாமி என்னும் புன் விளைவுகளை அறுப்பார்கள். வெயிலின் உஷ்டணம் மிகுதி. ஆனி ஆடி மாதங்களை முதிர் வேனிற் காலமென இந்த தேசத்தார் வகுத்திருக்கிறார்கள்.

## "ஒன்றுக்கும் ஆகாதவன்"

[பின்னால் வருஞ் சரித்திரம் நாகர் கோயிலில் அச்சிடப்படும் தேசோபகாரியிலிருந்து எடுக்கப்பட்டது. முழுச் சரித்திரத்தையும் ஒரே முறையில் அச்சிடுவதற்கு மிகவும் பெரிதாகவிருப்பதினால் இச்சங்கியையிற்பாதியும் வருஞ்சங்கியையிற்பாதியுமாகப்பிரசுரஞ்செய்கிறோம்.]

லண்டன் நகரத்தில் யோன் என்கிற ஒரு எளிய அநாத பையன் இருந்தான். ஒருநாள் ஒரு துரைசானி சில ரொட்டிகள்வாங்க அவனை அனுப்பினாள். அவன் வாங்கிக்கொண்டு வந்தபோது, அதுகளில் கொஞ்சம் திருடிக்கொண்டதாக துரைசானி அறிந்து, மிகுந்த கோபத்தோடு அவனைப்பார்த்து, நீ நன்றிகெட்ட நீசப்பயல், ஒன்றுக்கும் ஆகமாட்டாய், இன்று முதல் நீ என்னிடத்தில், ஆகாதுபோ" என்றுசொல்லி அவனை வெளியே துரத்திவிட்டாள். அந்த ஏழைச் சிறுவன் பசிபொறுக்கமாட்டாமல், கொஞ்சம் ரொட்டி எடுத்துத் தின்றபோட்டதினால், தனக்கு வந்த தண்டனை நியாயந்தானென்று உணர்ந்து வெகு சங்கடத்தோடு புறப்பட்டுப் போனான். அவன் சிறப்பத்தில்தானே தாய் தந்தைகளை இழந்து வீடு வாசலும் இனஞ்சனமுமற்றவனாயிருந்தான். அவன் கொஞ்சதூரம் மெதுவாய் நடந்துபோனபின்பு சங்கடத்தின் மிகுதியினால் ஒரு சுவரிலே சாய்ந்துகொண்டு நின்றான். அவனுடைய அலங்கோலத்தை அவ்வழியே போன யாவரும் கண்டு, அவனை அற்பமாய் எண்ணினதேயன்றி ஒருவரும் அவனை விசாரிக்கவில்லை. அப்போது அவன், "இவர்கள் எல்லாரும் என்னைப்போலஒன்றுக்கும் ஆகாதவர்கள் அல்ல. இவர்களுக்கு வீடுவாசலுண்டு. உயிரோடிருக்கிறபோது இவர்களைச் சிநேகிக்கவும், செத்துப்போனால் இவர்களை நினைத்துத் துக்கப்படவும் ஆட்கள் இருக்கிறார்கள். எனக்கோ இப்படி ஒருவருமில்லை, என்ன செய்யலாம்" என்று தனக்குள்ளே நினைத்து துக்கத்தோடு நிற்கையில், "அண்ணு, இங்கே வரமாட்டாயா"? என்று ஒரு சத்தம் அவனுக்குப் பின்னாலே கேட்டது. உடனே அவன் திடுக்கிட்டு, பின்னாலே திரும்பிப் பார்க்கையில், வெளிறின முகமுள்ள ஒரு பையன் கேவலமான ஒரு துணியும் தொற்றிக்கொண்டு, தனக்குச் சமீபத்தில் "கந்தைப்பள்ளி" என்று எழுதியிருந்த ஒரு பள்ளிக்கூடத்தைத் தூண்டிக்காட்டி, அங்கே வா என்று சொல்லிக் கூப்பிடுகிறதைக் கண்டான. யோன் என்பவன் அங்கேஎன்னைச் சேர்த்துக்கொள்ளமாட்டார்களென்று முனங்க, மற்றச் சிறுவன், "அங்கே ஆரும் போகலாம், இங்கே கூதலில் நிற்கிறதைப்பார்க்கிலும் அங்கே போனால் வெதுவெதென்று சுகமாயிருக்கும். வாத்தியார் எங்களுக்குப் புத்திசொல்லுகிறது வழக்கம். அதைக் கேட்கிறதற்கு இப்போதான் சமயம். மனசானால் வா நான் போகிறே"னென்று சொல்லி, இருமனமாய் நின்ற யோன் என்பவனைப் பள்ளிக்கூடத்திற்குக் கூட்டிக்கொண்டுபோனான். நன் மேய்ப்பரின் உத்தம ஊழியகாரியாகிய ஒரு அம்மான் அவருடைய ஆட்டுக்குட்டிகளை அந்தப் பள்ளிக்கூடத்தில் வைத்துப் போஷித்து வந்தான். அந்தப் பள்ளிக்கூடம் வெள்ளையடித்துச் சுசியாயிருந்ததுமன்றி அதன் சுவர்களில் சில ஞானப்பாட்டுகளும் வேத வசனங்களும் பரு எழுத்தாய் எழுதிப் பதித்துமிருந்தது. யோன் என்பவன் உட் பிரவேசித்தபோது, பள்ளிக்கூடம் நிறைய பிள்ளைகளிருந்து படிக்கிற இரைச்சலைக் கேட்டான். அவர்கள் எல்லாரும் அவனைப் போல கந்தை உடுத்த ஏழைகளாயும் "கந்தைப்பள்ளிக்கூடம்" ஸ்தாபிக்கப்படவில்லையானால், தெருவீதிகளில் அலைந்து திரிந்து பலவகையான தீமைகளும் செய்யத்தக்கவர்களாயுமிருந்தார்கள். சில பிள்ளைகள் வாங்குகளிலும் சிலபிள்ளைகள் தரையிலும் உளுக்கார்ந்து பாடம்படித்தார்கள். யோன் என்பவன் உட்பிரவேசித்து சற்றுநேரத்திற்குப் பின்பு, கெட்டையும் அழகுமான ஒரு அம்மான் வந்து ஒரு சாடை காண்பிக்க, எல்லாரும் தங்கள் புஸ்தகங்களையும் சிலேற்றுக்களையும் கீழே வைத்தார்கள். உடனே அந்தத் துரைசானி மேசையில் தட்ட, பிள்ளைகள் யாவரும் துரைசானியைக் கருத்தாய்ப் பார்த்துக்கொண்டு அமைதலாய் உளுக்கார்ந்தார்கள். சாந்தமும் அன்பும் நிறைந்த அந்தத் துரைசானி சவுக்கியமான தன் வீட்டை விட்டு, கந்தை உடுத்த அந்த ஏழைப் பிள்ளைகளிடத்தில் காடோறும் வந்து அவர்களை ரட்சகரிடம் வழிநடத்த சாக்கிரதையாய்ப் பிரயாசப்படுவாள். அவள் அந்தச் சிறுவரை நோக்கி, "என் நேச பிள்ளைகளே, உங்களுக்கொரு கதை சொல்லுவேனென்று வாக்குத்தத்தம்பண்ணியிருந்தேனே. கந்தை உடுத்த ஏழைப்பிள்ளைகள் படிக்கிறதற்கென்று ஸ்தாபிக்கப்பட்டதும் கந்தைப் பள்ளிக்கூடம் என்றுசொல்லப்படுகிறதுமான இந்த இடத்தில் கந்தைமாணுக்கரென்று பெயர்பெற்ற உங்களுக்கு நான் இப்போது பேசப்போகிறதினால் ஒரு கந்தையைக் குறித்துச் சில காரியங்கள் சொல்லப் போகிறேன். கவனமாய்க் கேளுங்கள்.

(இன்னும் வரும்.)

## முகஸ்துதிஇச்சகம்.

ஒருமுறை ஒரு பூனை ஒரு கிளிப்பிள்ளையைப் பிடித்து சாப்பிடத்தவங்குஞ் சமையத்தில், கிளிப்பிள்ளையானது யோக்கியர் தங்கள் வாய்களை அலம்பிச் சாப்பிடுவார்களென்றது. இவ்வாக்கைப் பூனை கேட்டவுடன் அது சரியென்று ஒத்துக்கொண்டு கிளியைப் பணிய வைத்துவிட்டு வாயலம்பப் போனது. கிளி இதுதான் சமயமென்று பறந்துவிட்டது. உடனே பூனை திரும்பிப் பார்த்து கிளியைக் காணுததால் மனத்தாங்கலடைந்து இனிச் சாப்பிடமுன் வாயலம்பேன், சாப்பிட்டதின்பின்தான் வாயலம்புவது வாடிக்கையாக வைத்துக்கொள்வேனென்று சொன்னது. இவ்விதமாகவே பூனைகள் இப்பொழுது செய்துவருகிறதென்பது ஒருகதை.

பிள்ளைகளே, முகஇச்சகம் பேசுகிறவர்களுக்கு உங்கள் செவிகளைச் சாயாதேயுங்கள். முகஇச்சகன் தன் காரியத்தையேயன்றி உங்கள்காரியத்தைக் கவனியான்.

## இராசகுமாரி.

இரண்டு சிமொட்டிகளாகிய மேன்குலஸ்திரிகள் வீற்றிருக்கும் கொலுமண்டபத்தைச் சமீபித்து ஒரு வறிய தேவபத்தியுள்ள ஸ்திரி நின்றாள். மேன்குலஸ்திரிகள் இருவரும் தேவபத்தியுள்ளவர்களானதால் அவளுடைய தரித்திரத்தையும் கந்தைத் துணியையுங் கவனியாமல் தங்களுடன் கூட வீற்றிருக்கும்படி பட்சமாகவும் நேசமாகவும் அவளை உள்ளாக அழைத்தார்கள். அவளுடன் இருவருந் தயவாகவுஞ் சந்தோஷமாகவும் தேவபத்தியை வளர்க்கும் விஷயங்களைக் குறித்துச் சம்பாஷித்தார்கள். இப்படிச் சம்பாஷிக்கையில் மேற்குறித்த இரண்டு

ஸ்திரிகளின் சகோதரன் அந்த அறையிற் பிரவேசித்தான். அவன் மிகு குசாலனும் பெருமைக்காரனுமானவன். தன் சகோதரிகளிருவரும் ஏழையாகிய இந்த மனுஷியுடன் கொலுமண்டபத்தில் சரிசமமாக இருப்பதைக் கண்டு, பிரமித்துநிற்கையில் ஒரு ஸ்திரி எழுந்துநின்று சகோதரனே, இம் மனுஷியைப் பற்றிப் பிரமியாதே. இவள் இராசகுமாரி. சகல ஐசுவரியமும் இவளிடத்திலிருக்கிறது. நிறமுள்ள பட்டுவஸ்திரம் மாத்திரமில்லாமல் வெள்ளை வஸ்திரம் மாத்திரம் அணிந்தவளென்றாள்.



பென்குவின்.

நீர்வாழுஞ் சவ்வடியுள்ள பறவைகள் தேசங்கடோறும் பல விதற்பமானவைகளாகவிருக்கின்றன. மேற்காணப்படும் பட்சி மிக நூதனமானது. இறகில்லாத இரண்டு செட்டைகள் இருக்கும். தென்சமுத்திர தீவுகளில் இவை மிகுதி. நிலத்திற் தத்தித் தத்தி அந்தக்கேடாக நடக்கும். நீரில் மகாவிரைவாக நீந்தும். இதற்குப் பேர் பென்குவினென்பார்கள்.

வால்க்குலாண்டு என்ற தீவிலும் தரைதெல்பியுகோ என்ற தேசத்திலும் குஞ்சு பொரிக்குங்காலத்தில் ஆயிரக்கணக்காக இப் பட்சிகளைக் காணலாம். இவைகளின்இறைச்சி சாப்பாட்டுக்கு ருசிகரமுள்ளதல்ல. மனுஷரைக் கண்டாற் பயந்து ஓடுகிறதில்லை. சமுத்திரத்தில் இரைகளைக் கண்டால் தப்பவிடாது. நீந்தும்பொழுது யாதொரு தடை இடையிலிருந்தால் சட்டென நாலு ஐந்தடி உயரத்திற்குத் துள்ளிப்பாயும். பென்குவின் பட்சிகளுள் பற்றைக்கோனியன் பென்குவினே மிக விசேஷித்தது. இவைகளில் ஒன்றை ஒருவன் பிடித்து வளர்த்தானென்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நாலடி நீளம் நாற்பதிறாத்தல் நிறை பாரமுள்ளதென்பதாகச்சொல்லப்பட்டிருக்கிறது.

## என்னவாயிருப்பான்?

இந்துதேச ஸ்திரியொருத்தி தனது குழந்தையைத் தன் காயிலுக்கு முன்பாக தடேருப் பாயின்மேல் ஒரு துணியைப் போட்டு வளர்த்திவிருப்பதை ஒரு வெள்ளைக்காரப் பிள்ளை கண்டு தன் மாதாவிடம் விசாரித்த பாவனையாகப் பின்வருங் கதை சொல்லப்படுகிறது.

அம்மாவே! இந்தச் சிறுகுழந்தை எவ்விதமாகப் பிற்காலத்திலிருப்பானென்று கேட்கத் தாயானவள் மகனே, கேட்பாயாக. இக் குழந்தையின் தாய் ஒரு அஞ்ஞானி. இவள் தேசம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கின்றன. சுவிசேஷ ஒளி இவள் தேசத்திற் சற்றும் பிரகாசிக்கவில்லை. வேதபுத்தகத்தை ஒருக்காலுங் கண்டறியாள். இவளுக்குக் கிட்டின குருமார் இருக்குமிடம் எறக்குறைய ௨௦ மைலுக்கப்பாலிருக்கின்றது. இப்படிப்பட்ட மாதாவின் கீழ்வளர்க்கும் பிள்ளை எவ்விதமாக இருப்பானென்று நினைக்கிறாய்?

பிள்ளை சேனுடனிருந்தால் பொய்த்தேவர்களை வணங்கும்படிபோதிக்கப்படுவான். தனக்குச் செய்யும் வந்தனை வழிபாடுகளைகண்டறியமாட்டாத விக்கிரகத்துக்கு தன் கையை எறெடுப்பான். முப்பத்துமுக்கோடி தேவர்கள் உண்டு என்று நம்புவான். வெண்மை, கருமை, கபிலை, ஊதா, செகப்பு முதலிய பல நிறமுள்ள தேவர்கள் உண்டு என்றும், அவர்கள் குட்டையரும் நெட்டையரும் என்றும், மனுஷர் குதிரை யானை குரங்கு முதலிய முகரூபங்களையுள்ளவர்களென்றும், யானை அன்னம் மயில் முதலிய வாகனங்கள் அவர்களுக்குண்டென்றும், பன்னிரு கையும் ஐந்து தலையும் ஆயிரங்கண்ணுமுள்ளவர்களென்றும், நம்புவான். இன்னும் அவர்கள் இரத்தப்பிரியர் என்றும், யுத்த சன்னத்தரென்றும் பொய் விபசாரம் கொலை களவு முதலிய தொழில்களைச் செய்கிறவர்களென்றும், விசுவாசிப்பான்.

சர்ப்பத்தைத் தொழுது, பால் பழம் முதலியவைகளை அதின் வளையில் வைத்து நாக இராசாவே, நல்லபாம்பே என்று ஸ்தோத்திரிப்பான். கங்காநதி விசேஷித்ததென்றும், அதைக் காணுதல் அல்லது அதின் நீரைக் குடித்தல் அல்லது தொடுதல் பாவத்தை நீக்குமென்றும், விருத்தராகிய தனது பெற்றோர் அதில் விழுந்து மரித்தால் அவர்களுக்குப் புண்ணியமுண்டென்றும் விசுவாசிப்பான்.

இன்னும் இவன் வளர்ந்து மனுஷனாய் எத்தொழிலைப் பழகினாலும் அத்தொழிற்குரிய தளபாடங்களை நமஸ்கரிப்பான். உ-ம். வேளாண்மை செய்யுங் கலப்பை முதலியவைகளுக்கும் சிற்பவேலை செய்யும் அகப்பை மட்டப்பலகைகளுக்குங் கம்மியத் தொழிலுக்குரிய வாய்ச்சி உளி குறடு முதலியவைகளுக்கும் யுத்தாயுதங்களாகிய வில் வேல் வாள் முதலியவைகளுக்கும் பூசைசெய்து நமஸ்கரிப்பான்.

இறக்கும் வேளையில் விபூதி உருத்திராட்சம் முதலியவைகளைத் தரிப்பதினாலும் சிவசிவா இராமா இராமா என்று சொல்வதினாலும் தன் பாவம் நீங்கி மோட்சஞ் சேரலாமென்று விசுவாசிப்பான். அல்லவென்று தான் பாவியாக இறந்துவிட்டால் தன் புத்திரர் செய்யும் அந்தியெட்டி திவசம் மானயம் முதலியவற்றால் கரையேறலாமென்று நம்புவான்.

பிள்ளைகளே, இவ்வகைப்பட்ட பிள்ளைகளை நீங்கள் காணவில்லையா? அவர்கள் ஆத்துமாவைப்பற்றிச் சிந்திக்கவில்லையா? இவர்கள் என்னவாயிருப்பார்களென்று உணரவில்லையா? சுவிசேஷம் உங்கள் கையிலிருக்க இவர்கள் கெட்டுப்போவானேன்? இவர்கள் இரத்தப்பழி ஆரிடத்திற் கேட்கப்படும். நீங்கள் மாத்திரம் இரட்சிக்கப்பட்டால் போதுமா? உன்னைப்போல உன் பிறப்பானவனை நேசியுங்களென்ற கற்பனையை மறந்திருந்தால் இப்பொழுதே அவர்கள் இரட்சிப்புக்காகக் கண்ணீருடன் உங்கள் வேலைகளிற் கையிடுங்கள்.

## தேவவல்லமை.

நமது பூமியைப்போல மூன்றிலட்சத்து முப்பத்தேழாயிரம் பூமி சேர்ந்தால் வானத்திற் காணப்படும் நமது சூரியனுக்குச் சமமாகும். ௬௨௱௮ பூமி சேர்ந்தால் வியாழன் என்னுங் கிரகத்துக்குச் சரியாகும். புதன் ஒரு நிமிஷத்தில் ௬௨௱ மைல் தூரஞ் செல்லுகின்றது. வர்சல் என்னுங் கிரகம் நமது பூமியிலும் ௧௨ மடங்கு பெரிதும் இலட்சத்து அ௱ கோடி மைல் சூரியனுக்கப்பாலிருந்து ஒரு நிமிஷத்தில் ௨௱௪௰ மைல்தூரஞ் செல்லுகின்றது.

ஆ! தேவவல்லமை எவ்வளவு பெரிது! பல இராச்சியங்களும் பாரியான மலைகளும் விஸ்தாரமான ஆழிய சமுத்திரமுமுள்ள நமது பூமி சருவவல்ல கடவுளுடைய கையில் ஒரு கோணாங்கல்லுக்குச் சமமுமல்லவே.

## நற்றீர்மானம்.

நகாயோகாட்டிலுள்ள ஒரு மதபானவிலக்குக்காரனாகிய காப்பிரியிடம் பீப்பாப் பலகைகளிருந்தன. அதை ஒரு தரைமகன் விலைகு வாங்கும்படி போனசமயத்தில், பலகைகள் உமக்கு என்னத்திற்குவேண்டும், சாராயப்பீப்பா உண்டாக்கும்படி என்று சொன்னான். நல்லது துரையே, பலகைகள் விற்கும்படிக்கே வைத்திருக்கிறேன், சாராயப்பீப்பா உண்டாக்க நான் விற்பதில்லையென்று சொன்னவுடன் தரைமகனுக்குக் கோபமுண்டு கறுத்தக்காப்பிரிப்பயலே என்னசொல்லுகிறாயென்றார். மெய்தான் நான் கறுத்தக் காப்பிரி அதைமாற்ற என்னால் முடியாது, சாராயப் பீப்பாவுக்குப் பலகை விற்க என்னால் முடியும், அது நான் செய்வதில்லையென்றான்.

பெற்றோரும் பிள்ளைகளும் இந்தக் காப்பிரியின் தீர்மானத்தைக் கவனிக்கவும். தன் வருமானத்தை அவன் பார்க்கவில்லை. பிறரின் கேட்டை உற்றுப்பார்த்துத் தன்னாலானமட்டுஞ் சாராயம் என்னும் ஆட்கொல்லியை விலக்கத் தெண்டித்தான். இதுபோல மதபான காரியங்களுக்கும் விக்கிரகாராதனைக்குரிய எவைகளுக்கும் உங்கள் செல்வாக்குச் செல்லுமட்டுக்குஞ் செலுத்த வீர்களாகில் தேசம் நன்மையடையுமென்பதற்குச் சந்தேகமில்லை.

## நற்புத்தி.

ஐக்கியதேசத்தின் முதற்பிரசாதிபதியாகவிருந்த வாஷிங்தன் (Washington) எனபவர் தான் உலகத்தில் நடத்திக்கொள்ளவேண்டிய ஒழுங்குகள் எவையென்ற தனது புத்தகத்தில் எழுதிவைத்தவைகளிற் சிலவற்றை இவ்வூர்ப் பிள்ளைகளுக்கு உபயோகமாகும்படி எழுதுகிறோம்.

௧. கூட்டத்திலிருக்கையில் நீசெய்யும் எத்தொழிலும் அவ்விடத்திலுள்ளோருக்கு மரியாதையுள்ளதாக இருக்கவேண்டும்.

௨. முகஇச்சகனாகவிராதே. உன்னுடன் விளையாடச் சம்மதியில்லாதவர்களுடன் ஒருபொழுதும் விளையாடாதே.

௩. நாலுபேருடனிருக்கையில் காகிதம், புத்தகம், புதினம் முதலியவைகளை வாசியாதே.

௪. மற்றவர்கள்வைத்து வாசிக்கும் கடதாசிகளை புத்தகங்களை வாசிக்கும்படி அவர்கள் அருகிற் செல்லாதே.

௫. மறுபேர் எழுதும்பொழுது பின்பக்கத்தில்நின்று எட்டிப்பாராதே.

௬. உன் முகஞ் செந்தழிப்புள்ளதாக இருக்கட்டும். தேவகாரியங்களைப்பற்றி பயபத்தியாகவிருக்கட்டும்.

௭. மற்றவர்களுக்கு நேரிட்ட ஆபத்தில் சந்தோஷப்படாதே.

௮. மற்றவர்களுடன் பேசும் சம்பாஷணைகள் மிகச் சுருக்கமாக இருக்கட்டும்.

௯. பிறர்முந்திப் பேசவிடுவது நற்பழக்கம்.

௰. உனக்கு மேலானவர்களுடன் ஞாயமுந்தரித்துப் பேசாமல் மரியாதையாகப் பேசு.

௰௧. ஒருவன் தன்னாற் செய்யக்கூடியதெல்

வாவற்றையுஞ் செய்ததின்பின் அவன் செவ்வையாச் செய்யாதிருந்தால் குற்றஞ் சார்த்தாதே.

௰௨. எச்சரிப்புக்களை ஸ்தோத்திரத்துடன் ஏற்றுக்கொள்.

௰௩. மற்றவர்களின் கீர்த்தியைக் கெடுக்கும் ஊர்ச்சுதையை லெகுவாக நம்பாதே.

௰௪. உனதிலையைக் கவனித்து உன் வஸ்திரத்தை உடு.

௰௫. மயிலைப்போலச் சிறகுவிரித்துத் திரியாதே.

௰௬. துர்சனருடன் இருப்பதிலும் தனித்திருப்பது நலம்.

௰௭. உன் பேச்சுக்கள் எரிச்சல் புகைச்சலில்லாமல் இருக்கட்டும்.

௰௮. உன் சிநேகிதனின் இரகசியங்களை அறியும்படி அவனை அலட்டாதே.

௰௯. சந்தோஷமுண்டாக்காத பகிடிகளைப் பேசாதே.

௨௰. பகிடியாக அல்லது நிட்கூருகக் கடுஞ் சொற்களைப் பேசாதே.

௨௰௧. மறுபேரின் வடுக்களை உற்றுப்பாராதே.

௨௰௨. மறுபேர் பேசுகையில் கவனித்துக்கேள்.

௨௰௩. புதினங்களை அறிவிக்க ஏதுவாயிராதே.

௨௰௪. மற்றவர்களின் காரியத்தை அறிய அலுவலாயாதே.

௨௰௫. முன்னிலையில் இல்லாதவனைப்பற்றித் தீமையாகப் பேசாதே.

௨௰௬. தேவனைப்பற்றிப் பேசுகையில் ஒடுக்க வணக்கத்துடன் பேசு.

௨௰௭. சிவசாட்சி மழுங்காதபடி கூராக்கு.

## கதவைப் பார்.

ஒரு வீட்டிலே தெருப் பக்கத்தை நோக்கியிருக்கிற கதவு மெத்தப் பெலப்புள்ளதும் உரப்புள்ளதுமாயிருக்கிறது. கதவின் கனத்தைப் பார். அதில் இடப்பட்டிருக்கும் பூட்டைப் பார். தாழ்ப்பாளைப் பார். வீட்டுக்குள் விலைபெற்ற உடைமைகளில்லாவிட்டால் இப்படிச்செய்யார்கள். தேசத்திற் கள்ளரில்லாதிருந்தால் இப்படிச்செய்யார்கள். அருமைப் பெருமையான பொருள்கள் வீட்டுக்குள்ளிருப்பதாலும் தேசத்திற் பொல்லாத திருடரிருப்பதினாலும் இப்படிப்பட்ட கதவு வேண்டியது. கதவு பெலப்புள்ளதும் உரப்புள்ளதுமாகவிருக்கவேண்டும்.

எங்களுக்கொரு வீடுண்டு. நமது இருதயமும் மனமுமே அந்த வீடு. பொல்லாத காரியங்கள் எங்கள் இருதயத்தில் புகுந்து நற்பொருள்களைத் திருடுகின்றது. எங்கள் இருதயங்களிற் புக ஏதுவாயிருக்கும் பொல்லாதவைகளிற் சிலவற்றைச் சொல்லுகிறேன். வாசலருகில் நிற்பதார்? ஆ! சினம் என்பவன் நிற்கிறான். அவன் முகம் எவ்வளவு கடுகடுப்பாக இருக்கிறது. அவன் உதடுகள் துடிப்பதைப் பார். அவன் கண் அக்கினிப்பொறிபோலிருக்கிறது. அவன் உட்பிரவேசியாதபடி கதவடைப்பேன். மற்றவனார்? அகந்தை. அவன் இறுமாப்பைப் பார். சகலதும் தனக்குக் கீழ்ப்பட்டதென்று எண்ணுகிறான். அவன் உட்பிரவேசியாமற் கதவைப் பூட்டுவேன். அடுத்தாப்போல நிற்பவனார்? இடாம்பன். அவன் ஒய்யார நடையையும் உடைமையும் பார். அவன் பிலுக்கைப் பார். சற்றும் இடங்கொடாமல் கதவை இறுக்கிச் சார்த்துவேன். அடுத்தவனார்? சோம்பன். மந்தனாய்த் தூங்கித் தூங்கி நடப்பதைப்பார் சும்மா இருக்கும்படிக்கே விரும்புகிறான். கந்தைத் துணிகளைப் பார். சோம்பேறி பிரவேசியாதபடி கதவுக்குத் தாழ்போடுவேன்.

ஆனால் இவர்களை விட்டு அப்பக்கத்தில தனித்து நிற்பதார். செந்தாமரைப் பூவைப்போன்ற கனிவான முகரூபுள்ளவனாக நிற்பதார்? அன்பு. அவன் நமது இருதயத்திற் பிரவேசித்தால் எவ்வளவு சந்தோஷம். வாரும் கதவு திறக்கப்படுகின்றது. பிள்ளைகளே, நல்லவைகளும் பொல்லாதவைகளும் உங்களிருதயத்திற் பிரவேசிப்பதற்குக் காத்துநிற்கின்றன. பொல்லாதவைகளை அப்பாற்படுத்தி நல்லவைகளுக்கு கதவைத் திறந்து இடங்கொடுங்கள். கதவைச் சார்த்திக்கொள்ளுங்கள். விழிப்பாகக் கதவை எப்போதும் பாருங்கள். யேசுவை உங்களிருதயத்திலிருக்கவிடுங்கள். நான் வாசலருகே நின்று கதவைத் தட்டுகிறேன் என்கிறார். அவரை உட்பிரவேசிக்கவிட்டால் உங்களுடன் அந்திப்போசனம்பண்ணுவார்.



## மேய்ப்பனும் ஆடுகளும்

உலகத்திலெங்கும் இருக்கும் கமக்காரர், தங்கள் தங்கள் கமங்களிற் பயிரிட்டுச் செய்கை பண்ணும்பொழுது ஆடு மாடு முதலிய மிருகங்களால் அதிகமான உதவியைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். நமது ஊரிலும் மேய்ப்பர் ஆடுகளை எவ்வளவு கவனமாகவும், பட்சமாகவும் வளர்த்து வருகிறார்களென்பதை நீங்கள் அறிவீர்கள். மேய்ப்பன் ஆடுகளிற் பட்சமாயிருப்பதுபோலவே, ஆடுகளும் மேய்ப்பனிற் பட்சமாயிருக்கின்றன. அவைகள் தங்கள் மேய்ப்பருடைய குரலை நன்றாய் அறிந்துகொள்ளும். இவ்விதமே மேய்ப்பனுக்கும், ஆடுகளுக்கும் உண்டான சம்பந்தத்தைக் குறித்து, எங்கள் இரட்சகரும் உவமையாகப் பேசியிருக்கிறார்.

பிள்ளைகளே, மேலே காட்டப்பட்டிருக்கிற படம் இந்த உவமையையே சுட்டியது. படத்தின் கிழக்குப்பக்கத்தில் சில ஆடுகள் நின்றுமேய்கின்றன. அவைகளுக்கு முன்னாலே நிற்கிறவர்தான் எங்கள் ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்து. படத்தின் மேற்குப்பக்கத்தில் நிற்பவர்கள் அவருடைய சிஷப்பிள்ளைகள். யேசு தமது சிஷப்பிள்ளைகளின் சமூகத்தில் இந்த உவமையைப் பேசினார். (யோவா. ௰: ௧—௧௬.) இந்த உவமையில் இரண்டுமூன்று கருத்துக்களுண்டு.

௧ வது. ஒவ்வொரு சபையின் குருவும், அந்தந்தச் சபையின் மேய்ப்பராகவே இருக்கிறார். சபையாரே, அந்த மேய்ப்பருடைய ஆடுகளாயிருக்கிறார்கள். ஒரு மேய்ப்பன் தன் ஆடுகளை எவ்வளவு கவனத்துடனும், பட்சத்துடனும் பராபரித்து வருகிறானோ, அவ்விதமே குருமாரும், தங்கள் தங்கள் சேகரத்தைச்சேர்ந்த ஆடுகளாகிய திருச்சபையைப் பரிபாலித்து வருகிறார்கள்.

௨ வது. இந்த உவமை, எங்கள் கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவையும், அவருடைய பட்டியின் ஆடுகளாகிய மெய்ப்பத்தரையுங் குறிக்கும். இரட்சகரே தமது பத்தசனங்களின் மேய்ப்பர். நானே நல்ல மேய்ப்பன், நல்லமேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் சீவனைக் கொடுக்கிறான் என்று இரட்சகர் சொன்னார். அவ்விதமே தம் சிறுட்டிகளாகிய மனுஷரை இரட்சிக்கும்படி அவர் தம் விலையேறப்பெற்ற சீவனைக்கொடுத்தார். மேய்ப்பனாகிய யேசுக்கிறிஸ்து, தமது ஆடுகளாகிய மெய்ப்பத்தர்களை அழைக்கும்போது, அவர்கள் அவருடைய சத்தத்தையறிந்து, அவரைப் பின்செல்வார்கள். அப்போ அவர், அவர்களைப் பசும்புல் நிலங்களிலே படுக்கப்பண்ணி, அமர்ந்த சலசமீபத்திற் கொண்டுபோய் விடுவார். கடைசியில், செம்மறியாட்டை, வெள்ளாட்டில் நின்று பிரிப்பதுபோல, அவபத்தரில் நின்று, தமது மெய்யான பத்தரைத்தெரிந்தெடுத்து, என்றென்றைக்கும் நிலைப்பதான நித்திய மோட்சவீட்டிற் சேர்த்துக்கொள்வார்.

பிள்ளைகளே பாருங்கள், எத்தனை மேன்மையான ஆசீர்வாதம். நீங்களும் இந்த ஆசீர்வாதமான மந்தையைச் சேர்ந்தவர்களா? இந்தக்கிடையில் உள்ளவைகளேயன்றி, வேறு ஆடுகளுமெனக்குண்டு. அவைகளையும் நான் நடத்திக்கொண்டுவரவேண்டும். அவைகள் என் குரலுக்குச் செவிகொடுக்கும். அப்பொழுது ஒரே ஆட்டுக்கூட்டமும், ஒரே மேய்ப்பனுமாகும் என்று, புறச்சாதியாராகிய எங்களைக்குறித்தே இரட்சகர் சொல்லியிருக்கிறார். ஆ! பிள்ளைகளே, இரட்சகரிடம்போய் அதிக வேண்டுகையுடனே, ஆண்டவரே, என் பாவங்களை மன்னித்துக்கொண்டு, உமது ஆடுகளுள் ஒரு ஆடாக என்னையுஞ் சேர்த்துக்கொள்ளுமென்று கேளுங்கள். அப்போ, நானே நல்லமேய்ப்பன் என்று சொன்ன அவர் உங்களை அங்கீகரித்து நித்திய மோட்சகரை ஏற்றுவார்.

## என்நாமம் வேதபுத்தகத்தில் இருக்கிறது.

ஆபிரிக்காவிலிருக்கும் உலாந்தாக்காரர் காப்பிரிகளை மிகவும் அற்பராக எண்ணுவார்கள். ஒருநாள் ஒரு உலாந்தாக்காரத் துரைமகன் குதிரைமீதேறிச் சவாரிபண்ணிப்போகையில் தெருவருகில் ஒரு காப்பிரி ஒரு புத்தகத்தை வாசித்துக்கொண்டிருந்தான். அவர் குதிரையை நிறுத்தி நீ வாசிக்கும் புத்தகம் என்னவென்றார். அதற்கு அவன் சத்தியவேதமென்றான். இது உங்கள்சாதிக்காக ஒருபொழுதும் கொடுபடவில்லையென்று துரைமகன் சொல்ல, காப்பிரி அது எங்களுக்காகவுங் கொடுக்கப்பட்டது, என் பேரும் இதில் இருக்கிறதென்றான். உன் பேரைக் காட்டென்றுகேட்க, ௧ தீமோ. ௧: ௧௫. வசனத்திலுள்ள "பாவிகள்" என்ற சொல்லைக்காட்டி இதுவே என்பேர். நான் ஒரு பாவி, ஆனதால் என்னைக் குறிக்கிறதென்றான். உடனே துரைமகனின் வாயடைபடக் குதிரையைநடத்தி அப்பாற்சென்றார். பிள்ளைகளும் பாவிகளானதால் வேதபுத்தகந் தங்களுடையதென்று சொல்வதுமாத்திரமல்லப் பலவிடங்களிலும் "குழந்தைகள்" என்றும் "சிறுபிள்ளைகள்" என்றுஞ் சொல்லப்பட்டிருப்பதால் விசேஷமாகத் தங்களுடையதென்று சொல்லவேண்டும்.

## என்னசொல்ல?

ஒருபிள்ளை மரிப்பதற்குமுன் குணப்படுத்தின வைத்தியரை நோக்கி, தப்பு, நான் மோட்சத்திற்குப் போகிறேன், நீர் யேசுவை நேசியாமலிருப்பதற்கு என்னசெய்வதென்று அவருக்குச் சொல்ல. அழுதுகொண்டுநின்ற பிதா மறுமொழிசொல்லுமுன் பிள்ளை மரித்துவிட்டது.

## பூமிசாஸ்திரக்கேள்வி.

௧. சீன இராச்சியத்திற்குள் அடங்கிய தேசங்கள் எவை?

௨. இவ்விராச்சியத்திலிருந்து அமெரிக்கா, ஐரோப்பா முதலிய தேசங்களுக்கு எவ்வளவு இருத்தல் தேயிலை அனுப்புகிறார்கள்? ௧ கோடி இறாத்தல்.

௩. சீனர் கைத்தொழிலாற்செய்யும் வஸ்துக்கள் என்ன? கோப்பை, பீங்கான், பட்டுச்சீலை, கொத்துவேலையுள்ள தந்தச்செப்புப்பெட்டிகள் முதலியவைகளே.

௪. சீன இராச்சியத்தின் அரசாட்சி எப்படிக்கொத்தது? சுயாதீனபத்திய அரசாட்சி.

௫. பிதாவை ஒருவன் கைதால் எவ்விதமாக எண்ணப்படுவான்? தலைக்குற்றவாளியாக.

௬. இத்தேசத்தின் மார்க்கமென்ன?

௭. இத்தேசத்தின் ஸதிரிகளுக்குக் கனமாக எண்ணப்படுவது என்ன? சிற்றடி.

௮. சீன இராச்சியத்தின் வடமதிலின் உயரம் நீளம் என்ன? ௨௰ அடி உயரம் ௲௫௱ மைல் நீளம்.

௯. இவ்விராச்சியத்தின் பிரதான நகரங்கள் என்ன?

## அந்திசந்திசவாரி.

C. M.

௧. நற்கந்தம் வீசல் காலையில்
உலாவ வாருங்கள்,
பூஞ்சோலைக்குள் இருக்கையில்
துள்ளாட்டல் கொள்ளுங்கள்.

௨. பளா, பளா, என் தோளரே,
களிப்பாய்க் கூடுங்கள்,
கொய்யோ, கொய்யோ, நன்னேசரே,
கம்பீரங் கொள்ளுங்கள்.

௩. ஆ! கல்வி, கல்வி, கிம்பது
சந்தோஷ காளிலே
மந்தம் உண்டாக்கும் என்பது
சத்தியங் கண்டோமே.

௪. பளா, பளா, என் தோளரே,
களிப்பாய்க் கூடுங்கள்,
கொய்யோ, கொய்யோ, நன்னேசரே
கம்பீரங் கொள்ளுங்கள்.

## சத்தியவேதக்கேள்வி.

௫ம் பாடம்.

யேசு தேவாலயத்திற்செல்லல்.

லூக். ௨: ௪௧—௫௨.

௧. வருஷந்தோறும் யோசேப்பும் மரியாளும் எவ்விடத்திற்குச் செல்லுவார்கள்?

௨. பஸ்காவாவதென்ன?

௩. எத்தனைவயதில் யேசு தேவாலயத்திற்குப் போனார்?

௪. யேசு தமது பெற்றாருடன் கூடத் திரும்பினாரா?

௫. அவர்கள் யேசுவைக் காணாதபொழுது என்னசெய்தார்கள்?

௬. அவரை எவ்விடத்திற் கண்டார்கள்?

௭. அவர் அங்கே என்னசெய்துகொண்டிருந்தார்?

௮. யூதபோதகர் அவரைக்குறித்து என்ன எண்ணினார்கள்?

௯. பெற்றார் அவரைக் கண்டவுடன் என்ன சொன்னார்கள்?

௰. அதற்கு அவர் என்ன மறுமொழி சொன்னார்?

௰௧. அவர் ஆருடைய சித்தத்தைச் செய்கிறோம் என்றார்?

௰௨. பெற்றாருடன் திரும்பிவந்து என்னசெய்தார்?

---

தஞ்சாவூர் வைகாசி மீ ௫ ௨ ௧௮௪௧ ஸு.

பாலியர்நேசனை வாசிக்கும் அருமையான பிள்ளைகளே,

ஒருவன் நற்பழக்கங்களைப்பழகி, ஒழுக்கமான காரியங்களிற் கையிட்டுத் தன் சீவியநாளெல்லாம் அதில் நிலைத்துநிற்பது முக்கியமான ஒரு காரியமென்று பலதருணங்களிலும் நினைத்தேன். வெறிப்பதார்த்தங்களைப் பாவிப்போருக்கு மெய்யாகவே இவ்வாக்குகள் தகுந்தவைகளாக இருக்கின்றன. வெறிப் பதார்த்தங்களை ஒருவன் பருமாற ஆரம்பிப்பானெனில் அவன் வறியவனாகவும் பெருங்குடியனுமாகவும் வரமாட்டானென்று ஆர்சொல்லுவான். மிகவுஞ் சாமர்த்தியமுள்ள ஒருபோதகன், கந்தைத்துணி அணிந்தவனாய் தெருக்கடோறுஞ் சென்னபட்டினத்திற் றிரிகிறானென்று இன்றையிற்றினங் கேள்விப்பட்டேன். அவன் தனது மனைவியையும் பிள்ளைகளையுங் குடிவெறியினால் மிகவுங் கொடுமையாக நடத்தினதால் அவர்கள் அவனை விட்டு நெடுநாளாகப் பிரிந்துவிட்டார்கள். கனம். பொருந்திய சுவாட்சு ஐயரவர்கள் வசித்த இத்தஞ்சைமாநகரத்திலுள்ள சவக்காலையில் ஒரு கோரியைக் கண்டேன் அதில் மதுரையிலிருக்கும் அமரிக்கன் மிஷனைச்சேர்ந்த பசுமலையிலுள்ள சாஸ்திரப்பள்ளிக்கூடத்தில் படித்த ஒரு மாணாக்கனது நாமம் வரையப்பட்டிருந்தது. இவ்வாலிபன் சருக்காரில் உயர்ந்த உத்தியோகத்திலிருந்தான். அப்படியிருந்தும் குடிக்கிறதொழிலில் கையிட்டான். குடித்து வெறித்தவனாய் சென்றவருஷத்தில் வைகாசிமாதம் ௨௰ந் திகதி தனது மச்சவீட்டின்மேல் உலாத்துகையில் அவன் சிநேகிதனொருவன் குடித்துவெறிப்பது ஆகாதென்று எச்சரித்தும் அவன் அதைக் கவனியாமல் மேற்படக் குடித்து வெறித்ததினால் அறிவுமயங்கிக் கீழேவிழுந்து அவன் மரிக்குமட்டும் அறிவற்றவனாகவேயிருந்தான். பிள்ளைகளே, இவன் ஆத்துமா எவ்விடத்திற்குச்சென்றது. வெறியர் தேவனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று சத்தியவேதஞ் சொல்லுகின்றது. ஆனாற் கல்வெட்டில் "அவன் பூமியிலிருப்பதற்குக் கிடைக்கத்தக்கவனல்ல" என்று எழுதியிருக்கின்றது. பாருங்கள் தேவன் எவ்விதமாக நிதானிக்கிறார். மனுஷர் எவ்விதமாக நிதானிக்கிறார்கள். இவ்விதமாகக்கல்லில்வரைந்திருக்க மரித்தவன் வெறியனாக இருந்ததுமன்றி, ஏழாங்கட்டளையை வெளிப்பொருளாக மீறினவனுமாக இருந்தானென்றறிய வந்தேன்.

எனது அன்பான பாலியரே, இதினால் இரண்டு காரியங்களைக் கற்றுக்கொள்ளுங்கள்.

௧வது. ஒருபொழுதும் வெறிப்பதார்த்தங்களைத் தொடாதேயுங்கள், அப்பொழுது நீங்கள் பத்திரமாயிருப்பீர்கள். வெறியராக வரமாட்டீர்கள்.

௨வது. எப்பொழுதும் நிதார்த்தமாகச் சத்தியத்தைப்பேசப் பயிலுங்கள். நாம் பெசுவதால் மற்றவர்களையும் நம்மையும் ஏய்க்கலாம் ஆனால் தேவனை ஒருபோதும் ஏய்க்கமுடியாது. கெந்தகமும் அக்கினியும் எரிகிற கடலில் ஆகாதவர்களுடன் கூடப் பொய்யரும் தங்கள் பங்கை அடைவார்களென்பதை நினைவுகூருங்கள்.

பாலியர்நேசனை வாசிகருஞ் சகலரையும் யேசுவானவர் தம்மைப்போல அவர்களிருக்கும்படிக்கும் தம்மை உண்மையாக நேசிக்கும்படிக்கும் தாம் சத்தியத்தைப் பேசினதுபோல அவர்களும் பேசும்படிக்கும் அனுக்கிரகஞ் செய்வாராக.

இப்படிக்கு,
உங்கள் சகலரையும் நேசிக்கும்
டி. ஸ். பர்நெல்.

## நீங்கள் என்ன?

ஓ! இனிய மொழியுள்ள பாலியரே!

ஒருநாள் எடுக்கச்சோம்பேறி, பேசச்சோம்பேறி, உண்ணச்சோம்பேறி, நடக்கச்சோம்பேறி, என்னும் நான்கு சோம்பேறிகள் கூடிக்கொண்டு வீதியிற் போனார்கள். அவ்விடத்தில் ஒரு காசு கிடந்தது. அதை எடுக்கச்சோம்பேறி பின்னால்வரும் பேசச் சோம்பேறியைப் பார்த்து "தம்பி பேசச்சோம்பேறி இதோ ஒரு காசு கிடக்கிறது எடுத்துக்கொண்டுவா என்றான். அதை உண்ணச்சோம்பேறி கேட்டு என்னால் இத்தனை பாரமான காரியஞ் செய்ய முடியுமா! என்னாலாகாது. தம்பி நடக்கச்சோம்பேறி இதோ கிடக்கிற காசை எடுத்துவா என்றான். அந்த நடக்கச்சோம்பேறி கேட்டு வாய்க்கிளைத்தோமென்றல்லவோ என்னை ஏவுகிறீர்கள். நான் முன்னமே சொன்னேன் வரமாட்டேனென்று. அவ்வாறிருக்க இந்தப் பாரத்தையும் எடுக்கச்சொல்லுகிறீர்கள். இது ஞாயமல்ல. நான்குபேருமாகத் தூக்குவதேநீதியென்று தனது வசமிருந்த கைச்சீலையை விரித்தான். அதில் நான்கு சோம்பேறியுங் கூடிக் காசைத் தூக்கிச் சீலையிற் போட்டு ஒவ்வொரு மூலையை ஒவ்வொரு சோம்பேறிகள் பிடித்துக் காவிக்கொண்டு சிலதூரஞ் சென்றார்கள். அவ்விடத்தில் வாழைப்பழக் கடையிருந்தது. அதைக் கண்டு இதைச் சுமந்துபோவதிலும் வாழைப்பழம் வாங்கித் தின்றுவிட்டுப் போகலாமென்று முடிவுகட்டிக்கொண்டு காசுக்கு வாழைப்பழம் எத்தனையென்று எடுக்கச்சோம்பேறி கேட்டான். கடைக்காரன் எட்டென்ன உண்ணச் சோம்பேறி உரித்துக்கொடுத்தாலெத்தனையென்றான்? ஆறென்றான். நடக்கச்சோம்பேறி வாயிற் போட்டாலெத்தனையென்றான் நான்கென்றான். நல்லதென்று சம்மதித்து கடைக்காரன் பழத்தையுரித்து சோம்பேறிகள் வாயைத் திறக்கச்சொல்லி போட மகிழ்வுடன் சென்றார்களாம்.

ஆ! பாலியரே, இவ்விதமான தன்மையை நாம் அடைந்திருப்பது நலமோ தீதா? ஒளவை இதைக்குறித்து ஏதேனுஞ் சொல்லியிருக்கிறாளா? சாலோமோன் சோம்பேறியைக் குறித்துச் சொல்லியிருக்கிறாரோ? நீங்கள் இவர்களைப்போல சோம்பலுள்ளவர்களாகவிருக்கிறீர்களோ? பாடசாலைக்குச் செல்லும்போது புத்தகங்கள் சுமக்கச் சோம்பலடைகிறீர்களோ? காலைமாலை குளிக்கப் பின்னிடுகிறீர்களோ? காலையில் வைகறைதயிலெழு என்பதற்கு மாறாகச் சோம்பலாய்ப் படுக்கைவிட்டெழாமல் கிடக்கிறீர்களோ?

இப்படிக்கு, சிங்கப்பூர்ச் சாராங்கோங்ரோட்டானுகிய பாலியர்பிரியன்.

## தொட்டாற்சுருங்கி.

பிள்ளைகளே உங்களிற் சிலர் தொட்டாற்சுருங்கியென்னும் பூண்டைக் கண்டிருப்பீர்கள். அதில் நீங்கள் உங்கள் விரல்களாற் றொட்டவுடன் ஏதோ வருத்தமடைந்ததுபோல வாடித்தூங்கும். என்னை வருத்தப்படுத்தாதே என்றது போற் றொடுகிறவனுக்குச் சொல்லும் பாவனையாகக் காட்டும். இவ்வுணர்ச்சியைத் தேவனே அதற்கு உண்டாக்கினார். ஆனால் நீங்கள் நெடுகத் தொடுவீர்களாகில் அதின் சுவரணை கெட்டு தொடுவதைப்பற்றிக் கவனியாது.

பிள்ளைகளே உங்கள் இருதய மன்னுந் தோட்டத்திற் சுவரணையுள்ள ஒரு தொட்டாற்சுருங்கியைத் தேவன் காட்டியிருக்கிறார். அதை நாம் சீவசாட்சியென்கிறோம். அதைச் சரியாக நாம் பாவிக்கில் சுவரணையுள்ளதாகவிருக்கும். தீயவை அதைத் தீண்டும்போது, தூர, தூர, என்று அருவருத்து என்னைத் தொடாதே என்று சொல்லும். இப்படிக்கொத்த சீவசாட்சியுள்ளவர்களாகவிருப்பது பெரும்பாக்கியம். அவர்கள் சகலதீமைக்கும் மோசங்களுக்கும் விலகுவார்கள். சீவசாட்சியின் சுவரணை மழுங்கிப்போதல் ஆகாது. பலமுறைகளிலுந் தீமைகளுக்குஞ் சோதனைகளுக்கும் இடங்கொடுப்பீர்களாகில் சுவரணை அற்றுப்போகும். சீவசாட்சியைக் காப்பாற்றுங்கள்.

## பூனையின் பிரயாணம்.

ஸ்கொத்லாந்து தேசத்திலுள்ள எடின்பேர்க்கு நகரியிலுள்ள ஒருதுரைசானி கிலாஸ்கோவில் வசிக்கும் ஒருஅம்மாளுக்கு ஒரு பூனையை பெட்டிக்குள் வைத்து மூடி ஒரு வண்டிலில் ஏற்றி அனுப்பினாள். இரண்டு மாசங்களாக அதை விழிப்பாகக் காத்துவருகையில் அது இரண்டு குட்டிகளை ஈன்றது. அது குட்டிகளைவிட்டு அப்புறம் போகாதென்ற நம்பிக்கையினால் முன்போல விழிப்புடன் பார்க்கவில்லை. இரண்டொருநாளையில் பூனையையுங் குட்டிகளையுங் காணாததினால் அந்த அம்மாள் துரைசானிக்கு பூனை குட்டிகளுடன் காணமற் போய்விட்டதென்று மிகுந்த துக்கமாக ஒரு சீட்டெழுதினாள்.

ஆனாற் பதினைந்து நாளையின்பின் பூனையும் குட்டிகளுமாக எடின்பேர்க்கில் முன் வசித்த துரைசானிவீட்டிற் கதவண்டையில் நின்றது. குட்டிகள் மெத்தக் கொழுப்பாகவும் தாய்ப்பூனை மிகவும் மெலிந்ததாகவுமிருந்தது. இரண்டு குட்டிகளையும் தாய்ப்பூனை ஒரேமுறையில் கவ்விக்கொண்டு போகக்கூடாததினால் தனித்தனியே முறைமுறையாக மாறிமாறிக் கவ்விக்கொண்டு போயிருக்கவேண்டும். எடின்போக்குக்கும் கிலாஸ்கோவுக்கும் ௪௰ மைல் தூரம். ஆகையாற் தாய்ப்பூனை மூன்றுதரம் நாற்பதுமைல் நடந்திருக்க ஆக, ௱௨௰ மைல் தூரம் நடந்திருக்கின்றது. இது பகற்காலத்திற் பயணம்பண்ணாமல் இராக்காலங்களில் பயணம்பண்ணியிருக்கவேண்டும்.

Printed and Published for the Youth's Christian Association, by N. Strong, at the Press of Ripley Strong, Manepy, Jaffna.